**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை - 2021**

------------------------------------------------------------------------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

--------------------------------

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------------

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-----------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

--------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.

எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இல்கை கணக்கீட்டு நியமம் 1 இலுள்ள 106 மற்றும் 108 ஆம் பந்திகளின் படி உரிமைத்துவத்தின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியதாக உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூலதன மானியம் ரூபா 5,920,019 தொகையும் மூலதன வருவாய் ரூபா 64,275,375 தொகையும் உரிமைத்துவ மாற்றங்கள் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளிற்காக தயாரிக்கப்படவுள்ள நிதிக் கூற்றுக்களில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்று இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இலுள்ள விதிமுறைகளிற்கு அமைய தயாரிக்கப்பட்டிருக்காமையால் செயற்பாட்டு | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 35,614,587 ஆல் குறைவாகவும், முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 34,533,678 ஆல் அதிகமாகவும், 2021 சனவரி 01 இல் உள்ளவாறான காசும் காசுக்கு சமமானவைகளினதும் பெறுமதி ரூபா 951,159 ஆல் அதிகமாகவும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசும் காசுக்கு சமமானவைகளினதும் பெறுமதி ரூபா 129,750 ஆல் அதிகமாகவும் காண்பிக்கப்பட்டிருந்தன. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இலுள்ள 36 ஆம் பந்தியின் படி கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்கள் நடப்பாண்டின் விரிவான வருமானக் கூற்றில் சீராக்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வுக் கட்டணத்திற்கான ரூபா 108,000 மேலதிக ஒதுக்கீடும் பெறுமதிசேர் வரிக்கான ரூபா 270,777 குறை ஒதுக்கீடும் உரிமைத்துவ மாற்றங்கள் கூற்றில் நிறுத்திவைத்த இலாபத்திற்குச் சீராக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இலுள்ள 81(ஈ) ஆம் பந்தியின் படி, கடந்த கணக்காண்டுகளுடன் ஒப்பிடுகையில் தொடர்புடைய வரி வீதங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மீதான தெளிவுபடுத்தலொன்று மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத் தப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையால் முன்னைய ஆண்டுகளில் பிரயோகிக்கப்பட்ட 28 சதவீத வரி விகிதம் மீளாய்வாண்டில் 14 சதவீதம் வரை குறைக்கப்பட்டமை தொடர்பிலான தெளிவு படுத்தலொன்று மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இலுள்ள 61 ஆம் பந்தியின் படி, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயட்காலத்தை வருடாந்தம் மீளாய்வாய்வு செய்து, எதிர்கார்க் கப்பட்ட நிலைமையானது மதிப்பீட்டிலிருந்து வேறுபடுமாயின் அந்த மாற்றங்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் படி, திருத்தியமைக் கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தகப் பெறுமதி பூச்சியமாகக் காணப்பட்ட ரூபா 7,233,052 கிரயம் கொண்ட 187 சொத்து விடயங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்திருந்ததுடன், இந்த நியமத்தின் 76 ஆம் பந்தியின் பிரகாரம் இது தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபை அமைந்துள்ள அலுவலக கட்டிடம், தேசிய மருந்துகள் தரப் பாதுகாப்பு ஆய்வுகூட கட்டிடம், அவை அமைந்துள்ள காணிகள் மற்றும் 06 வாகனங்கள் ஆகியவற்றை அதிகாரசபைக்கு கையேற்பதற்கும் மதிப்பீடு செய்து கணக்குகளிற்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அதிகாரசபைக்கு கையகப்படுத்தப்பட்ட 03 வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை கையேற்பதற்கு சுகாதார அமைச்சிடம் கோரப்பட்ட போதிலும், இது வரை பதிலளிக்கப்படாதிருப்பதுடன் கூடிய விரைவில் வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படும். | அதிகாரசபை பயன்படுத்தி வருகின்ற போதிலும் உரிமை கையேற்கப்படாதுள்ள அனைத்து செதாத்துக்களையும் கையேற்று அவை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையால் 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை வருமான வரியைக் கணிப்பிடுகையில், 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு அறைவரிச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின்படி, சட்டத்தின் 04 ஆம் பட்டோலையின் மூலம் மூலதன கொடுப்பனவு வழங்கப்படுகின்ற ஆண்டுகளின் எண்ணிக்கை திருத்தப்பட்டிருந்தமை மற்றும் 2021 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்திய) சட்டத்தின் 51 (2)(4)(ஏ) பிரிவின் பிரகாரம் 2020 ஜனவரி 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் சுகாதார பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதன் மூலம் கிடைக்கும் பெறுவனவுகள் மற்றும் இலாபங்கள் மீதி விதிக்கப்படுகின்ற வரி 14 சதவீதமாகக் குறைக்கப்பட்டமை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டிருக்காமை, 2020 ஆம் ஆண்டின் பிற்போடப்பட்ட வரிச் செலவைக் கணக்கிடுகையில் ஆரம்ப மீதியை தவறாக உள்ளடக்கியிருந்தமை மற்றும் மீளாய்வாண்டின் மூலதனக் கொடுப்பனவு கணக்கீட்டுப் பிழைகளுடன் தவறாகக் கணக்கிடப் பட்டிருந்தமை போன்ற காரணங்களால் நடப்பு வருமான வரிச் செலவு (Current Income Tax) ரூபா 124,779,725 ஆலும் பிற்போட்ட வருமான வரிச் செலவு (Differed Income Tax) ரூபா 13,359,739 ஆலும் மொத்த வரிச் செலவு ரூபா 138,139,464 ஆலும் அதிகரித்துக் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றிலுள்ள நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 124,779,725 ஆகவும், நடைமுறையல்லத பொறுப்புகளின் கீழ் பிற்போட்ட வருமான வரி ரூபா 10,413,183 ஆகவும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. அதன்படி, 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய சரியான வருமான வரி ரூபா 27,056,510 ஆன போதிலும், அதிகாரசபையால் 2022 ஜூன் 16 அன்று வருமான வரியாக ரூபா 151,836,233 செலுத்தியிருந்ததன் காரணமாக வருமான வரியாக ரூபா 124,779,723 அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | வருமான வரி மிகையாகச் செலுத்திப்பட்டுள்ளமை தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வருமான வரியைக் கணிப்படுகையில் பழைய மற்றும் புதிய திருத்தங்களைக் கருத்திற் கொண்டு அதனைக் கணிப்பீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அதிகாரசபைக்கு 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கிடைத்திருந்த வருமானங்களிலிருந்து கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருக்காத ரூபா 692,031 அத்திகதியில் செலுத்த வேண்டிய தொகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டுகளிற்காக தயாரிக்கப்படவுள்ள நிதிக் கூற்றுக்களில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். | கணக்கீட்டுக் காலப்பகுதிக்குரிய செலவினங்களை உரிய விதத்தில் இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | ஆதிகாரசபையால் நடாத்தப்பட்டிருந்த திறந்தவெளி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய ரூபா 527,065 செலவினம் பயிற்சி மற்றும் அபிவிருத்திச் செலவினமாக (Training and Development) கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அதில் ரூபா 65,025 ஏனைய செலவினத்தின் கீழும் ரூபா 45,290 உள்நாட்டு பிரயாண செலவினத்தின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், ஞாபகச் சின்னத்திற்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 138,250 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவிலலை. | செலவினங்களை கணக்கீடு செய்கையில் இடம்பெற்றுள்ள குறைபாடுகளுடன் இணங்குகின்றோம். | -மேற்படி- |

### 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | கிடைக்காத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பண பெறுவனவுகள் கணக்கிலுள்ள ரூபா 72,972,666 தொகையான மீதி | உரிய பட்டோலைகள் மற்றும் பெறுவனவு விபரங்கள் | இது தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதனைப் பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய பட்டோலைகள் மற்றும் பெறுவனவு விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டம் | | | |
| (i) 58, 59, 82 , 83 மற்றும் 109 ஆம் பிரிவுகள் | ஏதேனும் மருந்தொன்றை அல்லது மருத்துவ உபகரணமொன்றை அதிகாரசபையில் பதிவுசெய்யாது மற்றும் அதிகாரசபையிடமிருந்து அனுமதிப் பத்திரமொன்றை பெற்றுக் கொள்ளாது உற்பத்தி செய்யவோ அல்லது இறக்குமதி செய்யவோ கூடாது என்பதுடன், உயிரைக் காத்தல், | அவதானிப்புடன் இணங்கவில்லை. உயிரைக் காத்தல் அல்லது நோய்த் தொற்றுதல்கள் பரவாமல் தடுத்தல் போன்ற சிறப்பு சந்தர்ப்பங்களில் பதிவு இரத்தாதல், பதிவு செய்யப் | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட சந்தர்ப்பங்களில் மாத்திரம் பதிவுசெய்வதிலிருந்து விடுவிப்பதற்கான கடிதங் |

| | | | |
|---|---|---|---|
| | தொற்று நோய்கள் அல்லது நோய்த் தொற்றுதல்கள் பரவாமல் தடுப்பதற்கும் தேசிய நலன் மற்றும் தேசிய பாதுகாப்பு போன்ற சிறப்பு சந்தர்ப்பங்களில் மட்டுமே பதிவு செய்வதிலிருந்து விடுவிப்பதற்கான கடிதங்களை வழங்குவதற்கு அதிகார சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், அவ்வாறான சந்தர்ப்பங்களிற்கு உட்படாத பதிவு இரத்துச் செய்தல், பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் இல்லாமை போன்ற காரணங்களால், மீளாய்வாண்டில் அரசாங்க மருந்தகக் கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் நிறுவனங்களிற்கு 67 மருந்துகளிற்காகவும் 140 மருத்துவ உபகரணங்களிற்காகவும் பதிவு செய்தலில் இருந்து விடுவிப்புக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன. | பட்ட வழங்குனர்கள் இல்லாமை, மருந்துகளை இறக்குமதி செய்யாமை மற்றும் பதிவுசெய்தல்கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைதல் போன்ற காரணங்களால், அரசாங்க மற்றும் தனியார் துறையில் மருந்து பற்றாக்குறை ஏற்படுகையில் நாட்டில் மருந்து நெருக்கடி உருவாகுதல் போன்ற சிறப்பு சூழ்நிலைகளில், சுகாதார அமைச்சின் ஒப்புதலின் பேரில், சட்டத்தின் பிரிவு 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் தரச் சான்றிதழ் இல்லாத மருந்துகள் நாட்டிற்கு கொண்டு வரப்படுவதை தடுத்தல் வேண்டும். |
| (ii) 60 (2), 61, 84(2), 85, 103(2) மற்றும் 104 ஆம் பிரிவுகளும் உப பிரிவுகளும் | அதிகாரசபையால் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களை பதிவுசெய்தல் மற்றும் பதிவு நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் என்பன வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற கட்டளைகள் மூலம் பொது மக்களிற்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் அதிகார சபையால் வழங்கப்பட்டிருந்த 2,948 மருந்துப் பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் 991 நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களையும் 315 மருத்துவ உபகரண பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் 23 நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களையும் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், அதற்குப் பதிலாக அதிகாரசபையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டிருந்தது. | பதிவு செய்யப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட பட்டியல்களை அவ்வப்போது வர்த்தமானியில் வெளியிடுதல் நடைமுறைச் சாத்தியமற்றதால் அந்தத் தேவைப்பாட்டை நிறைவேற்றும் விதத்தில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு குழுவொன்றிடம் கையளிக்கப்பட்டுள்ளது. | சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) 69(1)(அ)(i) உப பிரிவு | மருத்துவ உபகரண மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக மருத்துவ உபகரணங்கள் ஒழுங்குபடுத்தல் பிரிவின் தலைவர் பணியாற்ற வேண்டிய போதிலும், மருத்துவ உபகரணங்கள் ஒழுங்குபடுத்தல் பிரிவின் தலைவர் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்காமையால் அதிகாரசபையின் தலைவர் அல்லது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மருத்துவ உபகரணங்கள் ஒழுங்குபடுத்தல் பிரிவின் தலைவராக செயற்பட்டிருந்தனர். | ஒழுங்குபடுத்தல் பிரிவுக்காக நியமிக்கப்பட்ட பதிற்கடமையில் ஈடுபடும் பிரிவுத் தலைவர்கள் (Focal Point) மருத்துவ உபகரண மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக செயற்படுகின்றனர். | குறித்த பிரிவுத் தலைவர்களை முறைப்படி நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) 142 ஆம் பிரிவின் படி வெளியிடப்பட்டுள்ள 2019 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 2145/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மருந்துகளை பதிவுசெய்தல் மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் கட்டளைகள் இல. 4, 133 (5) மற்றும் 134 இன் XXIII ஆம் பட்டோலையிலுள்ள 08 ஆம் பந்தி | மருந்துகளை பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்துக் கோரிக்கைகளையும் ஆவணப்படுத்துவதற்காக பொதுவானதோர் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மருந்துகளை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கிடைத்த திகதிகள், விண்ணப்பங்களின் இலக்கங்கள், உற்பத்தியாளரின் பெயர்கள், உற்பத்தி நாடு, அனுமதிபெற்ற இறக்குமதியாளர், மருந்துகளின் பெயர், அந்த மருந்தானது மருந்துகளின் கூட்டாக காணப்படின் அதிலுள்ள செயற்பாட்டுச் சேர்க்கைளின் மருத்துவப் பெயர்கள், மருந்தின் வர்த்தகப் பெயர், மருந்தின் உட்கொள்ளும் விதம், மருந்தின் வீரியம், விண்ணப்பமானது புதிதாக கிடைத்ததா அல்லது புதுப்பித்தலுக்கானதா என்பதும் மருந்தின் வகையும் குறித்த விபரங்கள் அத்துடன், விண்ணப்பத்துக்கா பெற்றுக் கொண்ட பணம் குறித்த விபரங்கள், குறித்த விண்ணப்பங்கள் மதிப்பீட்டிற்காக மருந்துகள் ஒழுங்குபடுத்தல் பிரிவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட திகதி, அந்தந்தப் பிரிவுகளால் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் அங்கீகரித்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை, அந்தந்தப் பிரிவுகளில் இதுவரையும் செயல் முறைப்படுத்தப்பட்டு வருகின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரிவினாலும் பதிவு செய்வதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட காலம் போன்ற தகவல்களை கணக்காய்விற்குப் பெற்றுக் கொள்ள முடிந்திருக்கவில்லை. ஆகையால், இலக்கிடப்பட்ட காலத்தினுள் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்த முடியவில்லை. அதன் படி மருந்துகளை பதிவுசெய்தல் மற்றும் அனுமதிப் பத்திரங்களை வழங்கும் செயல்முறை வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. 2021 நவம்பர் மாதத்தில் அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கியதாக google sheet பேணிச் செல்லப்படுவதாக தலைவரால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஆகஸ்ட் 31 வரையிலும் அந்த google sheet இற்கு நுழைவதற்குத் தேவையான இரகசியக் குறியீடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்தத் தகவல்களை அந்தந்த பிரிவுகளிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன், 2021 நவம்பர் மாதம் முதல் அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கியதாக google sheet பேணிச் செல்லப்படுவதுடன், அந்த தரவுகளை பகுப்பாய்வு செய்து செயல் முன்னேற்றத்தை பெற்றுக் கொள்ள முடியும். | கட்டளையிடப்பட்டுள்ள படி தரவுத் தளத்தை உரியவாறு பேணிச் செல்ல வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு | அதிகாரசபைக்காக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளர் பதவி அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அதற்குத் தேவையான ஆட்சேர்ப்புத் திட்டத்தை தயாரித்து, செய்திப் பத்திரகை விளம்பரம் பிரிசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கான திகதி குறிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் படி செயற்படுதல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் VIII அதத்தியாயத்தின் 4.1 மற்றும் 10.1 ஆம் பந்திகள் | வார இறுதி நாட்களிலும் அரசாங்க விடுமுறை தினங்களிலும் சேவையில் ஈடுபட்டமைக்காக 1/20 படிக்கு உரித்துடைய பதவிநிலை உத்தியோகத்தருக்கு மேலதிகநேரப் படி பெறுவதற்கு உரித்தில்லாத போதிலும், அதிகாரசபையில் சேவைபுரிகின்ற நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் உள்ளிட்ட 26 பதவிநிலை உத்தியோகத்தர்களிற்கு 998 விடுமுறை தினங்களிற்காக ரூபா 2,060,455 தொகையும் 8,520 மேலதிக வேலை மணித்தியாலங்களிற்காக ரூபா 1,977,619 தொகையும் என்ற வகையில் 1/20 படியும் மேலதிக நேரப்படியும் செலுத்தப்பட்டிருந்தது. | சுகாதார அமைச்சிடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்தப் படிகள் செலுத்தப்பட்டுள்ளன. | மேலதிகமாகச் செலுத்திய படிகளை மீள அறவிடுவதற்கு அல்லது தாபன விதிக் கோவைக்கு முரணாக செயற்படும் சந்தர்ப்பங்களில் அதற்காக தாபனப் பணிப்பாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை<br>------------------ | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 237(ஆ) | பொருட்கள் கிடைத்துள்ளமை பற்றியும், அந்தப் பொருட்கள் பொருட் பதிவேட்டில் அல்லது இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது என்பது பற்றியும் உறுதிப்படுத்தலை பெற்றுக் கொள்ளாது மீளாய்வாண்டில் 08 சந்தர்ப்பங்களில் ரூபா 578,958 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டது. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் படி செயற்படுதல் வேண்டும். |
| | (ii) நிதிப்பிரமாணம் 371(2) (ஆ) மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் | பதவிநிலை உத்தியோகத்தருக்கு மாத்திரம் ரூபா 100,000 வரை செயல் நிமித்தக் கட்டுநிதி வழங்கப்பட முடியுமான போதிலும், பதவிநிலை அல்லாத 08 உத்தியோகத்தர்களிற்கு 17 சந்தர்ப்பங்களில் ரூபா 1,794,000 செயல் நிமித்தக் கட்டுநிதி | 2022 ஆம் ஆண்டு முதல் முற்பணங்களை வழங்குதல் முறைப்படுத்தப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஆகியவற்றின் படி செயற்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| இலக்க அரச நிதித் திணைக் கள சுற்றறிக் கை | வழங்கப்பட்டிருந்தது. மேலும், வழங்கிய கட்டுநிதி தீர்க்கப்படுவதற்கு முன்னரே மீண்டும் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. | | |
| (iii) நிதிப்பிரமா ணம் 128(1) (உ), 507, 756, 757, 758, 770 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதித் திணைக் கள சுற்றறிக் கையின் I பகுதியின் 11.1 ஆம் பந்தி | கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒவ்வொரு நிதியாண்டினதும் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் மெய்மை யாய்வுச் சபையினை நியமித்து அதன் அறிக்கையினை கணக்காய்வா ளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அடுத்துவரும் நிதியாண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபை தாபிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டு முதல் மொத்தம் ரூபா 114,561,686 கிரயம் கொண்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவி ல்லை. | இது தொடர்பான நடடிக்கைகளை துரித மாக மேற்கொண்டு குறித்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். | -மேற்படி- |
| (iv) நிதிப்பிரமாணம் 1645 (அ) மற் றும் 1647(உ) | வாகனங்களுக்குப் பொறுப்புடைய உத்தியோகத்தரால் அவரது பொறுப் பிலுள்ள ஒவ்வொரு வாகனத்திற்கும் பொது 267 படிவத்தினை முழுமையாக பூரணப்படுத்தி உரிய முறையில் வாகன லொக் பதிவேடு நாளது வரையாக பேணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வாகனங்களுக்குப் பொறு ப்புடைய உத்தியோகத்தரால் அவரது பொறுப்பிலுள்ள வாகனங்கள் தொடர் பில் பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. | வாகனங்களிற்காக பதிவேடொன்றையும் லொக் பதிவேட்டையும் பராமரிப்பதற்கு நடவடி க்கை எடுக்கப்பட்டுள் ளது. | நிதிப்பிரமாணத்தி ன் படி நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) திறைசேரிச் சுற்றறி க்கைகள் -------------- | | | |
| (i) 1978 திசெம்பர் 19 ஆந் திக திய 842 ஆம் இலக்க திறை சேரிச் சுற்றறி க்கை | ரூபா 114,561,686 மொத்தக் கிரயம் கொண்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவை யான திருத்தங்கள் செய்யப்படும். | திறைசேரிச் சுற் றறிக்கையின் ஏற்பாடுகளின் படி நிலையான சொத்துக்கள் பதிவேடொன் றை பேணுவத ற்கு நடவடிக் கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | அனைத்து அரசாங்க நிறுவனங்ளினாலும் அவற்றிற்கு சொந்தமாகக் காணப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பான சரியான தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் அந்தப் பணியை ஒருங்கிணைப்பதற்காக ஒவ்வொரு நிறுவனத்தினாலும் ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், அதிகார சபையால் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை --------------- | | | |
| (i) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02 ஆம் இலக்க பிஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கைகள் | திறைசேரியின் அங்கீகாரமின்றி பதவியணியினருக்காக கொவிட் 19 ஊக்குவிப்புத் திட்டம் எனும் பெயரில் ஊக்குவிப்புத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு சாதாரண வேலை நாட்கள் மற்றும் வார இறுதி வேலைநாட்கள் என்பதைக் கருத்திற் கொள்ளாது கடமைக்குச் சமூகமளித்த நாளொன்றுக்கு **1** ½ நாள் வீதம் என்ற அடிப்படையில் கணிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டில் ரூபா 17,843,781 தொகையும் மீளாய்வாண்டில் ரூபா 44,273,092 தொகையுமாக மொத்தம் ரூபா 62,116,873 ஊக்குவிப்புப் படியாக செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது இந்தக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது. | செலுத்திய படியை மீள அறவிடுவதற்கு அல்லது திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1.1, 5.1.2 மற்றும் 5.1.3 ஆம் பந்திகள் | சுற்றறிக்கையின் 5.1.1 மற்றும் 5.1.2 ஆம் பந்திகளின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு 5.1.3 ஆம் பந்தியின் படி அதன் பிரதிகள் வரிசை அமைச்சு, பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களிற்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) 2015 யூலை 17 ஆந் திகதி PED/**03/2015** ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக அதிகாரசபையின் தலைவருக்கு மீளாய்வாண்டில் கொவிட் 19 படியாக ரூபா 454,827 எவ்வித அங்கீகாரமும் பெற்றப்படாது செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது இந்தக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது. | செலுத்திய படியை மீள அறவிடுவதற்கு அல்லது பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(எ) பொது நிர்வாக சுற்றறிக்கை

------------------

| | | | |
|---|---|---|---|
| (i) 2013 ஒக்தோபர் 07 ஆந் திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 02(ஆ) மற்றும் (இ) பந்திகள் | கலண்டர் மாதமொன்றுக்கு ஆகக் கூடியது 02 நாட்களிற்கு முன் ஆங்கீகாரத்துடன் விடுமுறை நாட்களில் பணியாற்றுவதற்கும் கொடுப்பனவு செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், 02 நாட்களிற்கு மேல் பணியாற்றுவதற்கு தேவையேற்படின் குறித்த வரிசை அமைச்சுச் செயலாளிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். இருப்பினும், அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது அதிகார சபையின் நிறைவேற்று உத்தியோகத்தர் உட்பட 22 பதவிநிலை உத்தியோகத்தர்களிற்கு மீளாய்வாண்டில் 415 நாட்கள் பணியாற்றயமைக்காக ரூபா 909,042 செலுத்தப்பட்டிருந்தது. | சுகாதார அமைச்சின் கடிதங்களிலுள்ள அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்தக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஒரு எரிபொருள் பரிசோதனையிலிருந்து 12 மாதங்களின் பின்னர் அல்லது 25,000 கி.மீ. தூரம் பயணித்த பின்னர் அல்லது என்ஜின் மீது பாரிய திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் என்ற நிகழ்வுகளில் எது முதலில் நிகழ்கின்றதோ அந்த நிகழ்வின் போது மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இருப்பினும், அதிகார சபைக்குச் சொந்தமான 09 வாகனங்களிற்கான இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் தற்போது உரிய தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது. | பொது நிர்வாக சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் படி செயற்படுதல் வேண்டும். |

## 1.7 காசு முகாமைத்துவம்

------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்றிருந்த பல்வேறு குழுக்களில் பங்குபற்றியமைக்கான படிகள், கொவிட் படிகள் மற்றும் | கணக்கீட்டு உத்தியோகத்தரால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | முறைப்படி விசாரணை மேற்கொள்ளப்பட்டு மேற்கொண்டு நடவடி |

| | | | |
|---|---|---|---|
| ஊக்குவிப்புப் படிகள் என்ற வகையில் மொத்தம் ரூபா 629,030 தொகையினை நிதிப் பிரமாணம் 271(2)(அ) மற்றும் (ஆ) பிரகாரம் குறித்த உத்தியோகத்தர்களிற்குச் செலுத்துவதற்கு அல்லது 14 நாட்களிற்குள் வங்கியில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அதிகாரசபையின் கணக்காளரால் 159 முதல் 865 நாட்கள் வரை கைவசம் வைத்திருக்கப்பட்டிருந்தது. இந்தப் படிகளைச் செலுத்துவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் அது தொடர்பில் வினாத்தொடுக்கையில் அதற்குப் பிந்திய தினமான 2022 யூன் 08 ஆந் திகதி ரூபா 629,030 தொகை நேரடியாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அத்துடன், 2022 ஆம் ஆண்டில் குழுக்களில் பங்குபற்றியமைக்கான படிகள், ஊக்குவிப்புப் படிகள், வருகைப் படிகள் மற்றும் மேலதிக நேரப் படிகள் என்ற வகையில் ரூபா 537,600 தொகையினை குறித்த உத்தியோகத்தர்களிற்குச் செலுத்துவதற்கு அல்லது வங்கியில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 15 முதல் 228 நாட்கள் வரை கைவசம் வைத்திருக்கப்பட்டிருந்தமை 2022 ஆகஸ்ட் 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக காசுக் கணக்கெடுப்பின் போது உறுதிப்படுத்தப்பட்டது. இவ்வாறு அரசாங்க பணம் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், நிதிப்பிரமாணம் 271(1) இன் படி செலுத்தப்படாது எஞ்சியுள்ள பணத்தையும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்களையும் பெட்டகமொன்றில் அல்லது பாதுகாப்பான இடமொன்றில் வைக்கப்பட்டு பூட்டிடப்பட வேண்டிய போதிலும், இந்தப் பணம் கணக்காளரின் அலுவலக மேசையிலுள்ள இலாச்சில் பாதுகாப்பற்ற விதத்தில் வைக்கப்பட்டிருந்தது. மேலும் இரண்டு பூட்டுக்களுடன் கூடிய பாதுகாப்பான பெட்டகமொன்று தலைமை அலுவலக கட்டிடத்தில் பயன்பாடற்ற விதத்தில் வைக்கப்பட்டுள்ளது. | | | க்கை எடுப்பதுடன், நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை செயற்படுமாறு உரிய உத்தியோகத்தர்களிற்கு பணிப்புரை வழங்கப்பட வேண்டும். |

1.8 தகவல் தொழில்நுட்ப (IT) பொதுக் கட்டுப்பாட்டு முறை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் தரவு முறைமையினை தன்னியக்கப்படுத்தல் ஒப்பந்தமானது ரூபா 29 மில்லியன் தொகையான மொத்த ஒப்பந்தப் பெறுமதிக்கு 05 ஆண்டு காலத்திற்கு தனியார் கம்பனி ஒன்றுக்கு 2018 மே 03 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆவணப்படுத்தல் மற்றும் பணி உள்வாங்கல் முகாமைத்துவ முறைமையினை சேவையொன்றாக நடைமுறைப்படுத்துவதற்காக Operational Expenditure Financing கட்டமைப்பின் படி கையேற்று நடைமுறைப்படுத்துவதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், 2019 யூன் மாதம் முதல் 2021 மே மாதம் வரையான காலத்தில் ஒப்பந்தக் கம்பனிக்கு ரூபா 12,253,328 | e-NMRA தரவுத் தளம் செயலிழந்த பின்னர் தற்போது இந்தத் தளம் பயன்படுத்தப்படாதுள்ளதுடன் மருந்துகள் மற்றும் உபகரணங்களின் பதிவு செய்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தரவு | அதிகாரசபையின் தரவுத் தளத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை திருத்திக்கொள்ளும் விதத்தில் இலகுவாக இயக்கக்கூடிய பொரு |

செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த தனியார் கம்பனியின் கவனயீனம் அல்லது வேண்டுமென்ற செயற்பாட்டால் இந்த தரவுத் தளத்திற்கு உள்வாங்கப்பட்டிருந்த சில தகவல்கள் அழிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை 2022 ஆகஸ்ட் 31 வரையிலும் இந்தச் சேவை செயலற்ற நிலையில் காணப்பட்டது. அவ்வாறே, இந்த முறைமையினை செயற்படுத்துகையில் தேவையான ஆலோசனைகள், முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை தகவல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பாடல் முகவர் நிலையத்துடன் 2018 யூன் 25 ஆந் திகதி ஒரு வருடத்திற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த போதிலும், 05 ஆண்டுகால ஒப்பந்தத்திற்கு சரிசமமாக அந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்த உடன்படிக்கையின் படி தகவல்களின் இரகசியத் தன்மையை பாதுகாப்பதற்காக இரகசியக் சொற்பதங்கள் மாற்றியமைக்கப்படுவதை அல்லது தகவல்கள் முறையற்ற விதத்தில் கையாளப்படுவதை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், முறைமை தன்னியக்கமாக்கப்பட்ட பின்னர் manual மற்றும் automation ஆகிய இரண்டு முறைமைகளையும் ஒரே நேரத்தில் செயற்படுத்தி அதிகாரசபையின் உள்ளகப் பணிகள் (workflow) தொடர்பில் கணக்காய்வுப் பரிசோதனையொன்று (Audit trial) மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கோவைகளின் முகாமைத்துவம், பராமரிப்பு மற்றும் ஆவணங்களின் பிரதிகள் பாதுகாப்பான விதத்தில் 05 ஆண்டுகள் வரை குறித்த தரவுகளுடன் களஞ்சியப்படுத்தக்கூடிய ஆற்றல், நாளாந்தம், வாராந்தம் மற்றும் மாதாந்தம் தன்னியக்கமாக பிரதிகளை பெற்றுக்கொள்ளக்கூடிய ஆற்றல் மற்றும் தொழில்சார் பொறுப்புக்களிற்காக பாதுகாப்பு பெற்றுக் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துதல் போன்ற விடயங்கள் குறித்து முகாமைத்துவம் கருத்திற் கொண்டிருக்காததுடன், குறித்த தரவுகள் மற்றும் இணைப்புகளின் தகவல்களை பாதுகாப்பாக பிரதியெடுக்காது ஒப்பந்தக் கம்பனிக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளின் படி, ரூபா 7,558,128 கிரயமுடைய இந்தத் தரவுத் தளத்திலுள்ள சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக அத்தொகை இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கும் அழிக்கப்பட்ட தகவல்களை மீள வைப்பதற்கு நியமிக்கப்பட்டிருந்த நிபுணத்துவக் குழுவினால் 2022 யூலை 15 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்த அறிக்கையின் படி தரவுத் தளத்திலிருந்து அழிக்கப்பட்ட தகவல்களை மீள வைக்க முடியாது என உறுதிப்படுத்தியிருந்தது. இந்தத் தரவுத் தள முறைமையின் செயற்பாடுகள் செயலிழக்கப்பட்ட பின்னர், தற்காலிக நடவடிக்கையாக கூகல் படிவத்தை (Google Form) பயன்படுத்தி மருந்துகள், உபகரணங்களின் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், அந்த முறை குறைபாடுகளுடன் இயக்கிச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

களை உள்ளீர்ப்புச் செய்வதற்காக Google Sheets பயன்படுத்தப்படுகின்றது. இந்த உள்ளீர்ப்பின் மூலம் தரவுத் தளத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற பணிகளை செய்வது சிக்கலானதாக இருப்பதுடன், முறையான தளவுத் தளமொன்றை நிறுவும் வரை உள்ளக நிறுவனப் பணிகளை இலகுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட தற்காலிக தரவு உள்ளீர்த்தல் முறையே இதுவாகும்.

த்தமான தகவல் முறைமையொன்று விரைவாக நிறுவப்படுதல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 567,192,769 தேறிய மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய மிகை ரூபா 673,604,866 ஆக காணப்பட்டதனால் நிதி விளைவுகளில் ரூபா 106,412,097 பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் திறைசேரிக்கு வரியாக ரூபா 400,000,000 செலுத்தப்பட்டமையே இந்த பின்னடைவிற்கு பிரதான காரணியாக பங்களித்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 14(ஒ) உப பிரிவின் படி, அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டிருந்த மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்கள் அல்லது விசாரணைக்குட்பட்ட மருந்துப் பொருள் உற்பத்திகளின் அளவு தொடர்பான தகவல்கள் அதிகாரசபையால் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | இறக்குமதி செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களின் அளவு மற்றும் அலகு விலைகள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கு தனியானதோர் பிரிவு உருவாக்கப்பட்டதுடன், 2022 மார்ச் 01 முதல் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் அளவை அதிகாரசபைக்கு அறிவிக்குமாறு 2022 பெப்ரவரி 23 ஆந் திகதி அதிகார சபையின் இணையதளத்தில் அறிவித்தல் வழங்கப்பட்டது. மேலும், பதிவை புதுப்பிப்பதற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற இறக்குமதியாளர்களால் குறித்த மருந்துகளில் முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட அளவு 2022 மார்ச் 04 முதல் GOOGLE SHEET இல் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இறக்குமதி செய்யப்பட்ட ஒட்டுமொத்த அளவு தொடர்பான தகல்கள் அதிகாரசபையிடம் காணப்படவில்லை. | சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் படி செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 41 (2), 66 (2) மற்றும் 87 (2) உப பிரிவுகளின் படி, மருத்துவவியல், மருந்துப்பொருள் மருத்துவம் மற்றும் மருந்தக விஞ்ஞானம் அல்லது ஏனைய தொடர்புடைய துறைசார்ந்த பட்டதாரி உத்தியோகத்தர் ஒருவர் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் (Medicine Regulatory) | அந்தப் பிரிவுகளின் தலைவர்களாக உயர் அனுபவம் கொண்ட சுகாதார அமைச்சின் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதிகாரசபையின் சேவை தேவை நிமித்தமும் மருந்தகர்களின் தகைமைகளின் அடிப் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவிற்கும், மருத்துவ உபகரணங்கள் ஒழுங்குபடுத்தல் (Medicine Devices Regulatory) பிரிவிற்கும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருள் ஒழுங்குபடுத்தல் (Border Line Production Regulatory) பிரிவிற்கும் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | படையிலும் உள்ளீர்க்கப்பட்ட பின்னர் உடனடியாக தகைமையுள்ள உத்தியோகத்தர்களை ஒழுங்குபடுத்தல் பிரிவுகளின் தலைவர்களாக நியமிப்பதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளது. | |
| (இ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 61(1)(ஆ)(v) உப பிரிவுகளின் படி இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் பெயரிடப்பட்ட நபர் மருத்துவ உபகரண மதிப்பீட்டுக் குழுவிற்கு நியமிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு நியமனம் செய்யப் பட்டிருக்கவில்லை. மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட கதிரியக்க உபகரணங்கள் மற்றும் திரவப் பொருட்களின் இறக்குமதி மற்றும் பாவனை தொடர்பில் உரிமங்களை வழங்குவதற்கும் யை ஒழுங்குபடுத்துவதற்கும் அதிகாரங்களைக் கொண்டுள்ள இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு மருத்துவ உபகரண மதிப்பீட்டுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கதிரியக்க உபகரணங்கள் மற்றும் திரவப் பொருட்களின் இறக்குமதியின் போதும் பதிவுக்காக மாதிரி இறக்குமதிகளிற்கு உரிமம் அனுமதிப்பத்திரம் வழங்கும் போதும் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் சான்றிதழ் பெறப்படுகின்றது. | -மேற்படி- |
| (ஈ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 72(1) மற்றும் 93(1) உப பிரிவுகளின் படி மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களை மதிப்பீடு செய்வதற்காக அந்தந்த மதிப்பீட்டுக் குழுக்களிற்கு பொதுவான வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டிருக் கவில்லை. மேலும், 72(4) மற்றும் 93(4) உப பிரிவுகளின் படி குறித்த மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான உரிய கால எல்லைகள் உள்ளிட்ட பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை களைக் குறிப்பட்டு, சிறந்த உற்பத்திப் பொருட்கள் சம்பந்தமான வழிகாட்டல்களையும் அதிகாரசபையால் பரிந்துரைக்கப்பட்ட ஏனைய தொடர்புடைய வழிகாட்டல்களையும் அமுலாக்கு வதற்காக மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களிற்கான பணிப்புரைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது வழிகாட்டல்கள் மற்றும் அவற்றை அமுல்படுத் துவதற்கான பணிப்புரைகள் தற்போது தயாரிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டு வருவதுடன் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களின் ஒழுங்குபடுத்தலுக்கான பணிப் புரைகள் காணப்படவில்லை. | -மேற்படி- |
| (உ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 74(1) மற்றும் 95(1) உப பிரிவுகளின் படி, அனுமதி வழங்கப்படுகின்ற மருத்துவ உபகரணங்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்கள் அமைச்சரால் | இரண்டு வாரத்திற்கு ஒரு முறை 50 இற்கும் 100 இற்கும் இடைப்பட்ட விண்ண ப்பங்கள் பதிவுசெய்தலுக்கு அல்லது நிராகரிக்கப்படுவத ற்கு பரிந்துரைக்கப்படுவதால் தொடர்ச்சியாக வர்த்தமானி | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | காலத்துக்குக் காலம் பட்டியலிடப்பட்டிருக்கவில்லை. | அறிவித்தலை வெளியிடுதல் நடைமுறைச் சாத்தியமற்றதாக காணப்படுவதால் சட்டத்திலுள்ள விதிகளை திருத்துவதற்கு குழுவொன்றிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 83(6) மற்றும் 102(6) உப பிரிவுகளின் படி, அமைச்சரால் மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களின் மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் தேசிய மருந்துகள் தரப் பாதுகாப்பு ஆய்வுகூடம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் அல்லது மதிப்பீடுகளின் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள், அந்தப் பரிசோதனை கள் அல்லது மதிப்பீடுகளிற்கால கால எல்லைகள், மருத்துவ உபகரணங்கள் மதிப்பீட்டுக் குழுவால் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய முறை மற்றும் அந்தக் கூட்டங்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளை தெளிவாகக் குறிப்பிட்டு பணிப்புரைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான பணிப்புரைகள் எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். | -மேற்படி- |
| (எ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக முறைப்பாட்டுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கௌரவ அமைச்சரால் மேன்முறையீட்டுக் குழு நியமிக்கப்படுதல் வேண்டும். | -மேற்படி- |
| (ஏ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் II ஆம் பகுதியின் 5.1 ஆம் பந்தியின் படி அனைத்து அரசாங்க நிறுவனங்களும் அவற்றினால் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளிற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களை மீளாய்வு செய்து மூன்று ஆண்டுகளிற்கு ஒருமுறை ஆகக்கூடியது 15 சதவீத திருத்திற்கு உட்பட்டு, குறித்த வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் தமது அமைச்சுச் செயலாளரின் பரிந்துரையுடன் அங்கீகாரத்திற்காக திறைசேரிச் செயலாளருக்கு அல்லது திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும். அதிகாரசபையால் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களிற்காக பதிவுச் சான்றிதழை வழங்குதல், அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், பதிவுசெய்தலிலிருந்து விடுவித்தல் அங்கீகாரம், பொதியிடுவதற்கான அங்கீகாரம், முகவர்களிற்கு ஒப்படைப்பதற்கான அங்கீகாரம் போன்ற அங்கீகாரங்களை வழங்குதல், பரிசோதனைகளை நடாத்துதல் | இது தொடர்பில் விசேட கவனம் செலுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | பொது நிதிச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் படி செயற்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் வழங்கப்படுகின்ற ஏனைய சேவைகளிற்காக அறவிடப்படுகின்ற கட்டண ங்கள் 2018 சனசவரி 05 ஆந் திகதி இறுதியாக திருத்தப்பட்டிருந்தன. அதன்படி, மீளாய்வாண்டில் கட்டணங்கள் திருத்தப்பட்டு அந்தத் திருத்தங்கள் அங்கீகாரத்திற்காக பொதுத் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அதன் படி செயற்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டில் கட்டணங்களிலிருந்தான வருமானம் ஏறத்தாழ ரூபா 187,913,601 இனால் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | மீளாய்வாண்டில் 18 சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களின் தவறுகள் மற்றும் ஏனைய பல்வேறு காரணங்களால் ரூபா 1,620,119 கூட்டுத்தொகையான வருமானம் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிலைமை கடந்த பல வருடங்களாக காணப்பட்ட போதிலும், இதனைக் குறைத்துக் கொள்வதற்காக போதிய ளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபை உத்தியோகத் தர்களின் தவறுகள் காரண மாக வருமானத்தை மீளச் செலுத்த வேண்டியிருப்பது டன், இந்த மீளளித்தல்களை முறைப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டில் சேரிக்கப்பட்ட வருமானத்தை மீளளிப்பதற் கான குழுவொன்று நியமிக்க ப்பட்டு அந்தக் குழுவின் அங்கீகாரத்துடன் VAT வரி மற்றும் முத்திரைக் கட்டணம் தவிர்ந்த ஏனைய வருமான ங்களை மீளளிப்பதற்கான முறையொன்று அறிமுகப்படுத் தப்பட்டது. | வருமானங்களை மீளளித்தல் சந்தர் ப்பங்களை குறை த்துக் கொள்வத ற்காக நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | தேசிய மருந்துகள் தரப் பாதுகாப்பு ஆய்வுகூடத்தினால் (National Drugs Quality Assurance Laboratory) ஆய்வுகூடத்தின் தரப்படுத்தல் தொடர்பில் இணக்கப்படாட்டு மதிப்பீட்டுச் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை இணக்கப்பாட்டுச் சபைக்கு 2020 பெப்ரவரி 06 ஆந் திகதி விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 யூலை 31 ஆந் திகதி வரை அந்த தரப்படுத்தல் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு முடியாது போயிருந்ததுடன், பெற்றுக்கொண்டிருந்த ஏனைய தரச் சான்றிதழ்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தச் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அடிப்படை தேவைப்பாடுகள் இதுவரை ஆய்வுகூடத்தில் காணப்படாமையால் இந்தச் சான்றிதழை பெற்றுக் கொள் ளல் தாமதமடைந்துள்ளது. | இந்தச் சான்றி தழை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அடிப் படை தேவைப் பாடுகளை வழங் குவதற்கு இயன்ற ளவு முயற்சித்தல் வேண்டும். |
| (ஓ) | 2018 ஆம் ஆண்டில், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு தாமதமாக பணம் செலுத்தியிருந்தமை, பெறுமதிசேர் வரி விலக் களிப்பை உரிய காலத்தில் கோரியிருக்காமை, மற்றும் அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தியிருந்த பெறுமதிசேர் விரியை மீளப்பெறுவதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட் டிருந்தமை ஆகிய காரணங்களால் மிகைவிதிப்பு மற்றும் பெறுமதிசேர் வரியாக ரூபா 756,173 | அவதானிப்புடன் இணங்குகின் றேன். | மிகைவிதிப்பு மற் றும் பெறுமதிசேர் வரியாக மேலதிக மாகச் செலுத்தப் பட்டிருந்த தொகை க்கு பொறுப்பு டைய உத்தியோக த்தர் களிடமிருந்து அத்தொகை அறவிடப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மீளாய்வாண்டில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப் பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஔ) | 2018 சனவரி 05 ஆந் திகதிய 2052/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியால் திருத்தப்பட்டு 2017 யூன் 14 ஆந் திகதிய 2023/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த 2017 இன் 02, 03 மற்றும் 04 ஆம் இலக்க கட்டண பணிப்புரைகளின் படி மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களை தனிப்பட்ட முறையில் வழங்குவதற்காக பதிவுசெய்தலிலிருந்து விடுவிப்பதற்கு விண்ணப்பிக்கையில் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையால் பதிவுசெய்தலிலிருந்து விடுவிப்பதற்கு அங்கீகாரம் வழங்குகையிலேயே கட்டணம் அறவிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் நிராகரிக்கப்பட்டிருந்த மருத்துவ உபகரணங்களின் பதிவுசெய்தலிலிருந்து விடுவிப்பதற்கான தனியார் துறையின் 207 விண்ணப்பங்களிற்காக அறவிடப்படக் கூடியதாகவிருந்த ரூபா 11,473,421 கட்டண வருமானம் அதிகார சபைக்கு இழப்பாகியிருந்தது. 2018 முதல் 2022 ஆகஸ்ட் 22 வரையான காலத்தில் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக் கோட்டு உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் இவ்வாறு செயற்பட்டிருந்தமையால் அதிகார சபைக்கு கணிப்பிட முடியாத அளவுக்கு பாரிய வருமானம் இழப்பாகியிருந்தது. | விண்ணப்பதாரர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள முறையில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் கட்டணம் அறவிடுவதில் நிச்சயமற்ற நிலை காணப்படுகின்றமையால் அப்போதைய பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரால் வாய்மொழிமூலம் வழங்கப்பட்ட ஆலோசனையின் படி விண்ணப்படிவம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. | வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டவாறு கட்டணம் அறவிடப்படுதல் வேண்டும். |
| (ஃ) | வேலைகள் முடிவடைந்த கோவைகளை எடுத்துச் சென்று பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி பராமரித்துச் செல்லும் ஒப்பந்தம் அதிகாரசபையால் 2015 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் தனியார் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் ஆரம்பம் முதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான 06 ஆண்டு காலத்தில் ஒப்பந்தகாரருக்கு ரூபா 6,062,550 செலுத்தப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் அப்போது ஒப்பந்தகாரர் வசம் காணப்பட்ட கோவைகளின் ஒரு பகுதி வெள்ளத்தால் அழிவுற்றதாக குறிப்பிட்டு 2016 மே மாதம் முதல் 2017 ஏப்ரல் மாதம் வரை ஒப்பந்த காரருக்கு பணம் செலுத்துதல் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும், வெள்ளத்தால் சேதமடைந்திருந்த கோவைகள் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 யூன் 30 வரையிலும் ஒப்பந்தகாரர் இடமிருந்து குறித்த சேவை பெற்றுக் கொள்ளப்பட்டு வந்திருந்ததுடன், கடந்த 06 ஆண்டுகளிற்கும் இதற்காக செலவிடப்பட்டுள்ள கிரயத்தை பகுப்பாய்வு செய்து அதிகாரசபைக்கென | வெள்ளத்தால் சேதமடைந்திருந்த கோவைகளை பாதுகாப்பாக வோரொறு களஞ்சியத்துக்கு எடுத்துச் சென்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் பின்னர் அந்தக் கோவைகளிலிருந்து பிரதிகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கக்கப்பட்டது. இருப்பிரும், இந்தக் களஞ்சியங்களில் தற்போது காணப்படுகின்ற கோவைகளை பரிசோதனைக்கு உட்படுத்தி தேவையான திருத்தங்களை செய்வதற்கு உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. களப் பரிசோதனையை 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கோவைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக | வெள்ளப் பெருக்கு தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்படுவதுடன், அதிகார சபைக்கென ஆவணப்படுத்தல் நிலையமொன்றை ஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆவணப்படுத்தல் நிலையமொன்றை ஸ்தரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த கம்பனியுடன் தற்போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதிகாரசபைக்கென ஆவண ப்படுத்தல் நிலையமொன்றை ஸ்தரிப்பது தொடர்பில் கலந் துரையாடப்பட்டு வருகின்றது. | |

3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் பிரகாரம் தரப்பரிசோதனைக்காக தேசிய மருந்துகள் தரப் பாதுகாப்பு ஆராய்ச்சி ஆய்வகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மருந்து மாதிரிகளில் 2021 சனவர் 01 வரை பரிசோதனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாத மருந்து மாதிரிகளின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்டிருந்த 216 மருந்து மாதிரிகளில் 157 மாதிரிகளுக்கும், மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த 477 மருந்து மாதிரிகளில் 299 இற்கும் மாத்திரம் மீளாய்வாண்டில் பரிசோதனை சான்றிதழ்கள் வழங்கப்பட்டி ருந்தன. அதன்படி, 2019 முதல் 2021 வரையிலான 03 ஆண்டுகளில் பெறப்பட்ட மருந்து மாதிரிகளில், 2022 யூலை 31 வரை பரிசோதனை அறிக்கைகள் வழங்கப்படாத 91 மாதிரிகளில் 42 மாதிரிகள் நீதிமன் றத்தால் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளாகும். ஆகையால் குறித்த நீதிமன்ற நடவடிக்கைகளில் கணிசமான கால தாமதம் ஏற்படுவதற்கு இது காரணமானமாகும் என்ற அபிப்பிராயத்தை கணக்காய்வில் நிராகரிக்க முடியாதுள்ளது. | பகுப்பாய்வுக்காக பெற்றுக் கொள்ளப்ப டுகின்ற அனைத்து மாதிரிகளும் தொடர்பான தரப்பரிசோதனை அறிக்கைகள் அந்த ஆண்டின் போது அல்லது தொடர்ந்துவரும் வருடத்தில் வழங்கப்படுகின்றது. | ஆய்வுகூடத்தி ற்கு சமர்ப்பிக் கப்படுகின்ற மருந்து மாதிரி களிற்கான தரப் பரிசோதனை அறிக்கைகளை தாமதமின்றி வழங்குவதற்கு ம் அது தொடர் பான தரவுத் தளம் மற்றும் தகவல்களை முறையாக பேணுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மருந்து மறுபதிவுக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களுக்கு மறுபதிவுச் சான்றிதழ் களை வழங்குவதற்குப் பதிலாக, ஏற்கனவே உள்ள பதிவை நீடிக்கும் முறை பின்பற்றப்பட்டிருந்த போதிலும், அதற்காக முறையான ஒப்புதல் பெறப்பட்டிருக்க வில்லை. மீளாய்வாண்டில் மருந்துப்பொருள் மீள்பதிவுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த 3,892 விண்ணப்பங்களில் 2,904 விண்ணப்பங்களிற் காக ஏற்கனவே காணப்பட்ட காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் 988 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. பதிவு நீடிப்பு முறையைப் பின்பற்றியதன் காரணமாக, 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய | அவதானிப்புடன் இணங்குகின்றேன். | சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் படி செயற்படு தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 47(3) மற்றும் 59(4) ஆகிய உப பிரிவுகளின் அடிப்படையில் மருந்து மதிப்பீடு தொடர்பான விதிகள் மீறப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 43(2)(அ), (ஆ) மற்றும் 68(2) (அ) மற்றும் (ஆ) ஆம் உப பிரிவுகளின் பிரகாரம் மருந்துகள் மதிப்பீட்டுக் குழு மற்றும் மருத்துவ உபகரணங்கள் மதிப்பீட்டுக் குழுவிற்கு பதிவுகளிற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பிரதிபலன்கள், ஆபத்துக்கள், எதிர்ப்புச்சக்தி, தரம், பாதுகாப்புத்தன்மை, தேவைப்பாடு, விலைகள் மற்றும் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அந்த மருந்துகளின் பொருளாதார ரீதியான பகுப்பாய்வை உறுதியாகக் காண்பித்து தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், மருந்துகள் மதிப்பீட்டுக் குழு மற்றும் மருத்துவ உபகரணங்கள் மதிப்பீட்டுக் குழுவினால் அவ்வாறான தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மருத்துவ உபகரணங்கள் மதிப்பீட்டுக் குழுவினால் அவ்வாறான தொழில்நுட்ப மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மருத்துவ உபகரணங்கள் மதிப்பீட்டுக் குழு மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்பட்டு 50 முதல் 100 இற்கு இடைப்பட்ட அளவிலான விண்ணப்பப் படிவங்களை மதிப்பீடு செய்கின்றமையால் அந்த அறிக்கையை சமர்ப்பித்தல் நடை முறைச் சாத்தியமற்றதாக இருப்பதுடன் அதற்கமைய, இந்த மதிப்பீடானது மருத்துவ உபகரணங்கள் ஒழுங்குபடுத்தல் பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த சிக்கல் குறித்து மருத்துவ உபகரணங்கள் ஒழுங்குபடுத்தல் பிரிவால் அதிகாரசபை சட்டத்தை திருத்துவதற்கான குழுவிற்கு பரிந்துக்கைக்கப்பட்டுள்ளதுடன், மருந்துகள் தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீடானது மருந்துகள் மதிப்பீட்டு உப குழுவால் மேற்கொள்ளப்படுகின்றது. | -மேற்படி- |
| (ஈ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 83(4) (ஆ) மற்றும் 102(4) (ஆ) ஆம் உப பிரிவுகளின் பிரகாரம் பதிவுகளிற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்ற மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களின் தரத்தை பரிசோதிப்பதற்காக அவை தேசிய மருந்துகள் தரப்பிரிசோதனை பாதுகாப்பு ஆய்வுகூடத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குத் தேவையான வசதிகள் ஆய்வுகூடத்தில் இல்லை என்பதாக அதிகாரசபையின் தலைவரால் கருத்துரை வழங்கப்பட்டிருந்தது. | மருத்துவ உபகரணங்களின் சிகிச்சையளித்தல் மதிப்பீட்டிற்காக, தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களல் மூன்றாம் தரப்பிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தரப்பரிசோதனை பாதுகாப்பு அறிக்கை (Third Party Test Report) ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அறிக்கை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான வசதிகள் தற்போது வைர தேசிய மருந்துகள் தரப்பிரிசோதனை பாதுகாப்பு ஆய்வுகூடத்தில் இல்லை என்பதுடன், பல்வேறு மூலப் பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற மருந்துகள் எல்லைக் கோட்டு உற்பத்திப் பொருட்களின் கீழ் பதிவு செய்யப்படுவதுடன், இந்த உற்பத்திப் பொருட்களிலுள்ள அநேகமான மருந்துகள் ஒரு தொகுதியாக எடுக்கப்பட்டு மூலப் பொருட்கள் மற்றும் மருந்துகள் என்ற வகுதிக்குள் எடுக்கப்பட முடியாத மூலப்பொருட்கள் காணப்படுவதனால் அந்த உற்பத்திப் பொருட்களை பரிசோதிக்கக்கூடிய ஆற்றல் தேசிய மருந்துகள் தரப்பிரிசோதனை பாதுகாப்பு ஆய்வுகூடத்தில் இல்லை. | -மேற்படி- |

(உ) பதிவுக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற கோவையொன்றின் (Dossier) மதிப்பீட்டை முடிப்பதற்கு அதிகபட்சம் தேவைப்படும் காலம் 300 நாட்கள் என்ற போதிலும், 2020 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 146 களிற்குப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்காததுடன் அவற்றிற்கு 2022 யூன் 25 ஆந் திகதி வரை பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் பதிவுசெய்யப்பட்டிருந்த 25 மருத்துவ உபகரணங்களிற்குரிய Dossiers மாதிரியை பரிசோதித்தபோது 06 Dossiers களின் பிரதான மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக 02 நாட்களும் மேலும் 04 Dossiers களின் மதிப்பீட்டிற்காக ஒரு மாதத்திற்கும் குறைவான காலமும் செலவிடப்பட்எருந்தது. ஆனால் பதிவை முடிப்பதற்கு 01 முதல் 03 ஆண்டுகள் வரையான வீச்சில் காலம் எடுக்கப்பட்டிருந்தது. 18 Dossiers அதிகாரசபைக்கு கிடைத்த நாளிலிருந்து, பிரதான நிறைவேற்று அதிகாரியால் அதனை மருந்தகர்களிற்குச் சமர்ப்பிப்பதற்கு 1½ மாதங்கள் முதல் 01 ஆண்டு வரை எடுத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றில் 11 Dossiers களின் செயலாற்றல் மதிப்பீட்டிற்காக சம்பந்தப்பட்ட கல்லூரி (College) அல்லது வெளிப்புற மதிப்பீட்டாளருக்கு (External Evaluator) கையளிப்பதற்கு 05 மாதங்கள் முதல் 01 வருடமும் 09 மாதங்களும் வரை எடுக்கப்பட்டிருந்தது. செயலாற்றல் மதிப்பீட்டின் பின்னர் 09 Dossiers களின் தொழில்நுட்ப மதிப்பீட்டை ஆரம்பிப்பதற்காக மருந்தகர்களால் 05 மாதம் முதல் 01 வருடமும் 04 மாதங்களும் வரை எடுக்கப்பட்டிருந்ததுடன், மருத்துவ உபகரணங்கள் மதிப்பீட்டுக் குழுவால் பதிவுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த 09 Dossiers களிற்கு பிரதான நிறைவேற்று அதிகாரியால் அங்கீகாரம் வழங்குவதற்கு14 நாட்கள் முதல் 02 மாதங்கள் வரை காலதாமதம் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், அதிகாரசபையால் இந்த கால தாமதத்தைக் குறைப்பதற்காகவும் பதிவு செய்தல் செயல்முறையை வினைத்திறனாகவும் துரிதமாகவும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அவதானிப்புடன் இணங்கவில்லை.

மருத்துவ உபகரணங்களின் தன்மை, அளவு, ஆபத்து, சிகிச்சையளிப்புப் பரிசோதனை தொழில் கல்லூரிக்கு அனுப்பிவைத்தல், சத்திர சிகிச்சையின் போது நோயாளி ஒருவருக்குப் பயன்படுத்துதல் மற்றும் நுண்ணுயிர் மாதிரிகளிற்காக பயன்படுத்துதல் போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முறைகளின் ஊடாக பரீட்சிக்கப்பட வேண்டியிருப்பதால் பரிசோதனைக் காலத்தை உறுதிப்பட குறிப்பிட முடியாதுள்ளதுடன், ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தாபிக்கப்பட்டுள்ள போதிலும், இடம்பெற வேண்டிய கட்டமைப்பு மாற்றங்கள் இடம்பெற்றிருக்காமை, களஞ்சிய வசதிகள் இல்லாமை, போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லாமை, விண்ணப்பங்கள் குறைபாடுடையவையாக காணப்படுதல், அதற்குப் பதிலளித்திருக்காமை, அவற்றை திருத்துவதற்கு ஏற்படுகின்ற காலமும் இக்காலத்தில் உள்ளடங்குகின்றமை, மற்றும் COVID நோய்த்தொற்று நாட்டில் பரவியமை போன்றன இதற்கான காரணங்களாகும். இருப்பினும், இந்த நிலைமைகளை இனங்கண்டு அதற்கு அநேக தீர்வுகள் தற்போது வழங்கப்பட்டுள்ளன.

மதிப்பீடு மற்றும் பதிவு செய்தல் செயல் முறையை வினைத்திறனாகவும் துரிதமாகவும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | செயலாற்றல் மதிப்பீட்டிற்காக பல் மருத்துவவியலாளர் கல்லூரிக்கு (College of Dentistry and Stomatology) சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த மருத்துவ உபகரணப் பதிவுக்காககச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த Dossier ஒன்று முதலாவதாக மகரக அபேக்ஷா மருத்துவமனைக்கும் அதன் பின்னர், இரசாயனவியல் நோய் நிபுணர் ஒருவருக்கும் (Consultant- Chemical Pathology) சமர்ப்பிக்கப்பட்டு இறுதியாக பல் சிக்கை மருத்துவவியலாளர் கல்லூரிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் Dossier கிடைத்த நாளிலிருந்து 03 ஆண்டுகளும் 03 மாதங்களிற்கும் தாமதிக்கப்பட்ட பின்னர், பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே மயக்கவியல் மருத்துவக் கல்லூரிக்கு (College of Anesthesiologist) சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த மருத்துவ உபகரணப் பதிவுக்காககச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த Dossier ஒன்று தொண்டை, காது மற்றும் மூக்கு அறுவைசிகிச்சை நிபுணர் கல்லூரிக்கு (College of ENT Surgeons) சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் Dossier கிடைத்த நாளிலிருந்து 02 ஆண்டுகளும் 01 மாதமும் தாமதிக்கப்பட்ட பின்னர், பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, அதிகாரசபையால் மருத்துவ உபகரணங்களின் செயலாற்றல் மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டிய கல்லூரியை நிச்சயிப்பதற்காக மதிப்பீட்டுக் குழுவுக்கு முறையான வழிகாட்டல் அறிமுகப்படுத்தப் படாதிருந்ததுடன், தொழில்சார் தீர்மானத்தின் அடிப்படையில் சரியான கல்லூரியை தேர்ந்தெடுத்திருக்காமை காரணமாக பதிவுசெய்தல் செயல் முறையில் தாமதம் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புடன் இணங்கவில்லை.<br><br>சிகிச்சையளித்தல் மதிப்பீட்டிற்கு தொழில்சார் கல்லூரியை தெரிவு செய்தல் என்பது முழுமையாக தொழில்நுட்ப ரீதியான காரணியாக காணப்படுகின்றது. | தொழில்நுட்ப விடயங்களின் அடிப்படையில் சிகிச்சையளித்தல் மதிப்பீட்டை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | பதிவுக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற Dossier களை பராமரிக்கையிலும் தொடர்புடைய ஆவணங்களைத் தயாரிக்கையிலும் கவனக்குறைவாக அல்லது வேண்டுமென்றே தவறான தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், சில பணிகள் நிறைவேற்றப்பட்ட தேதிகள், அதிகாரிகள் பற்றிய தகவல்களும் சில அத்தியாவசிய ஆவணங்களும் Dossier இல் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சில Dossier களில், செயலாற்றல் மதிப்பீட்டிற்காக குறித்த Dossier மற்றும் மாதிரிகள் சம்பந்தப்பட்ட கல்லூரிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மற்றும் திரும்பப் பெறப்பட்ட தேதிகள், மருந்தகர்களால் தொழில்நுட்ப மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டு முடித்த தேதிகள், | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | Dossierகளில், செயலாற்றல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு பட்டியல் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் மருந்தகர்களின் பரிந்துரைகள், குறியீடுகள் மற்றும் கையொப்பங்கள் என்பன காணப்படாதிருந்ததுடன், தொழில் நுட்ப மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியலில் தவறான தகவல்கள் சேர்க்கப்பட்டிருந்தன. சில Dossier களில், விண்ணப்பத்தின் சுருக்க அறிக்கை மற்றும் மருந்தாளுநர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டைச் செய்து பரிந்துரைகளை வழங்கிய தொழில்நுட்ப மதிப்பீட்டு சரிபார்ப்புப் பட்டியல் ஆகியவை சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | மருத்துவ உபகரண மதிப்பீட்டுக் குழுவிற்கு 20 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் நடைபெற்ற 10 கூட்டங்களில் உறுப்பினர்களின் பங்கேற்பு 35 சதவீதத்திற்கும் குறைவாக இருந்ததுடன், 07 உறுப்பினர்கள் ஒரு கூட்டத்திலேனும் பங்கேற்காமையால், ஆய்வக சேவைகள், உயிரியல் மருத்துவ விஞ்ஞான பொறியியல், பல் மருத்துவ சேவைகள், உயிரியல், அறுவைசிகிச்சை நோயியல் மற்றும் கதிரியக்கவியல் போன்ற துறைகளிற்கான நிபுணத்துவ அறிவு குழுவின் தீர்மானங்களிற்காக கிடைத்திருக்கவில்லை. | மருத்துவ உபகரண மதிப்பீட்டுக் குழுவிற்கு 20 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன், அவர்கள் அனைவருக்கும் இலத்திரனியல் தபால் மூலம் குழுக் கூட்டங்களில் பங்கேற்குமாறு அறிவிக்கப்பட்டடிருந்தது. அவ்வாறே, தொலைபேசி ஊடாகவும் அந்த அறிவித்தல் வழங்கப்பட்டது. | மருத்துவ உபகரண மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களின் அதிகூடிய பங்குபற்றலை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | ஒசுசல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்காக நிகழ்நிலை (online) முறையின் ஊடாக பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், நிகழ்நிலை கணனிமயப்படுத்திய தன்னியக்க முறைமை 2021 ஆகஸ்ட் மாதத்தில் செயலிழந்தமையால் புதிய அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்குப் பதிலாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்களிற்கு இறப்பர் சீல் பொறிக்கப்பட்டு காலநீடிப்புச் செய்து கையொப்பமிடப்பட்டிருந்தது. அந்தக் கால நீடிப்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்காததுடன், கால நீடிப்பிற்காக கையொப்பமிட்டிருக்காத சந்தர்ப்பளும் காணப்பட்டன. | நிகழ்நிலை முறைமை செயலிழந்தமையால் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு புதிய முறையொன்றை உடனடியாக தயாரிக்க முடியாது என்பதால் தற்காலிக நடவடிக்கையாக இந்த முறை பின்பற்றப்பட்டது. அவ்வாறு செல்லுபடியாகும் காலம் நீடிப்புச் செய்யப்பட்ட சகல அனுமதிப்பத்திரங்களினதும் ஸ்கேன் பிரதிகள் (Scan Copies) மாவட்ட ரீதியாக கோர்வை செய்யப்பட்டு கணனியில் வைக்கப்படுள்ளதுடன், இந்த காலநீடிப்புச் செய்யப்பட்ட அனுமதிப்பத்திரங்களில் அதிகாரசபையின் நிறைவேற்று உத்தியோகத்தரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் கையொப்பமிடப்பட்டு இறப்பர் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. | அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கு பாதுகாப்பான நடைமுறையொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3.3 கொள்வனவுகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாடகை அடிப்படையில் எடுக்கப்பட்டிருந்த புதிய அலுவலகக் கட்டிடத்தில் அலுவலக அறைகளை பிரித்துக் (Partition) கொடுப்பதற்காக மிகக்குறைந்த தொகையான ரூபா 4,898,750 இற்கு கூறுவிலை சமர்ப்பித்திருந்த மனுதாரருக்கு 2020 திசெம்பர் 17 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இந்த கொள்வனவின் போது, அரசாங்க கொள்வனவு வழிகாட்டுதல்களின் 2.8.1 (ஆ), 2.12, 5.4.8, 6.3.3, 6.3.6 மற்றும் 8.12.2 ஆகிய வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டிருக்காததுடன் வழிகாட்டுதல் 5.4.4 இன் படி முற்பணத்தைச் செலுத்துவதற்கான பிணைமுறி பெறப்படாமல் ரூபா 979,750 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | கொரோனா நிலைமை காரணமாக போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் கூறு விலைகள் இலத்திரனியல் கடிதத்தின் மூலம் கோரப்பட்டதுடன், புதிய கட்டிடத்தின் வாடகை உடன்படிக்கை 2020 நவம்பர் 20 முதல் அமுலாகும் வரையில் கையொப்பமிடப்பட்டுள்ளமையாலும் அலுவலக அறைகளை பிரித்து பதவியணியினருக்கு வசதிகளை வழங்க வேண்டியிருந்தமையாலும் மேற்குறிப்பிட்டவாறு கூறுவிலைகள் கோரப்பட்டன. | அரசாங்க கொள்வனவு வழிகாட்டுதல்களிலுள்ள வழிகாட்டல்களின் படி செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ரூபா 6,854,519 செலவிடப்பட்டு சந்தை போட்டி விலை முறையை பின்பற்றி தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அரசாங்க கொளவனவு வழிகாட்டுதல்களின் 2.14.1 இன் பிரகாரம், ஆகக் குறைந்த சீல் வைக்கப்பட்ட 05 கூறுவிலைகளேனும் பெறப்பட வேண்டிய போதிலும 03 கூறுவிலைகள் மாத்திரம் கோரப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், அரசாங்க கொளவனவு வழிகாட்டுதல்களின் 2.8.1 (ஆ), 6.3.5 (அ), (ஆ), (இ), 6.3.6, 8.12.3 (அ), (ஆ), (இ), ஆகிய வழிகாட்டல்களிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக செயற்பட்டு இந்தக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய கொரோனா நிலைமை, தளாபடங்களிற்கான பாரிய பற்றாக்குறை, செய்திப் பத்திரிகைகள் உரிய விதத்தில் அச்சிடப்பட்டிருக்காமை மற்றும் கட்டிட வாடகை உடன்படிக்கை 2020 நவம்பர் 20 இல் அமுலாகும் விதத்தில் கையொப்பமிடப்பட்டிருந்தமை போன்றன காரணமாக கூறுவிலைகளைக் கோருதல் நடைமுறைச் சாத்தியமற்றது என்பதனால் மூன்று வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகள் பெறப்பட்டுள்ள போதிலும், அதற்காக கொள்வனவுச் சபை தீர்மானம் எடுக்கப்படாததுடன் எதிர்காலத்தில் இக்குறைபாடு திருத்திக் கொள்ளப்படும். | -மேற்படி- |
| (இ) | அரசாங்க கொளவனவு வழிகாட்டுதல்கள் கையேட்டின் 9.3.1 (ஆ) வழிகாட்டலின் படி ரூபா 200,000 இற்கு மேற்பட்ட வாகன திருத்தங்களிற்காக வரிசை அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், அந்த எல்லையை மீறி அதிகாரசபைக்குச் சொந்தமான 03 வாகனங்களை திருத்துவதற்காக மொத்தம் ரூபா 3,676,401 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அதற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, திருத்தங்களின் போது அகற்றப்பட்ட பாகங்கள் மற்றும் அவற்றைக் கையேற்றமைக்கான லொக் | எதிர்காலத்தில் இவ்வாறான திருத்தங்களிற்குத் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

பதிவுகள் காணப்படவில்லை. வாகனங்களிற்குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தரினால் அந்தப் பாகங்கள் கையேற்கப்பட்டிருக்கவுமில்லை.

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை நிரந்தமான 235 பதவியணியினரையும் ஒப்பந்த அடிப்படையிலான 22 நபர்களையும் உள்ளடக்கி 257 ஆகக் காணப்பட்டது. மொத்த உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 160 ஆன போதிலும், அதிலுள்ள 38 நபர்கள் அங்கீகரித்த பதவியணியில் உள்ளடங்காத மேலதிக பதவியணியினராக காணப்பட்ட மையால் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை 135 ஆகும். ஆங்கீகரித்த பதவியணியில் உள்ளடங்கியுள்ள உயர்மட்ட 19 முகாமைத்துவ பதவிகளில் 16 பதவிகள் அல்லது 84 சதவீதமானவை வெற்றிடமாகக் காணப்பட்டமையால் தேவையான மற்றும் தேவையற்ற பதவிகளை இனங்கண்டு அங்கீகரித்த ஊழியர்கோப்பை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், தேவையான பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகின்றமையானது அதிகாரசபையின் ஒட்டுமொத்த செயலாற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டது. 30 மருந்துகளை மதிப்பீடுசெய்யும் உத்தியோகத்தர்கள் மற்றும் 12 உதவி மருந்துகளை மதிப்பீடுசெய்யும் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரையின் படி உள்ளீர்ப்புச் செய்வதற்கோ அல்லது ஆட்சேர்ப்புச் செய்வதற்கோ இந்த அறிக்கையின் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவிகளில் தற்போது 109 பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுவதுடன், 12 மருந்துகள் பகுப்பாய்வாளர் பதவிகளிற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், குறித்த பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகாரம் வழங்கவில்லை. அத்துடன், மேலும் 09 பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கான திகதி குறிக்கப்பட்டுள்ளது. | தேவையான மற்றும் தேவையற்ற பதவிகளை இனங்கண்டு அங்கீகரித்த ஊழியர் கோப்பை திருத்துவதற்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரையின் படி உள்ளீர்ப்புச் செய்வதற்கோ அல்லது ஆட்சேர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை என்பற்றின் பிரகாரம் நியதிச்சட்ட சபைகளின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 02 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2022 ஏப்ரல் 22 ஆம் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தாமதமடைந்தது. | சுற்றறிக்கையில் குறித்துரைத்த திகதியில் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

4.2 வருடாந்த அறிக்கைகயை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து ஆறு மாதங்களிற்குள் அமைச்சருக்கு அதிகாரசபையால் அந்த நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக் கைகள் தொடர்பான வருடாந்த அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டியதுடன், அந்த அறிக்கையுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளும் எதிர்வரும் ஆண்டிற்கான உத்தேச செயற்பாடுகள் குறித்த அறிக்கையும் இணைக்கப்படுதல் வேண்டும். அந்த அறிக்கை கிடைத்த திகதியிலிருந்து ஆறு மாதங்களிற்குள் அமைச்சரால் அது பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டு முதல் வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு அமைச்சருக்கும் பாராளுமன்றத்துக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்கான வருடா ந்த அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு பணிகள் மற்றும் அச்சிடல் பணிகள் நடவடிக்கை கள் முடிவடையாதிருப்பதுடன், 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. வருடா ந்த அறிக்கையில் உள்ளடக்க ப்பட வேண்டிய ஏனைய தகவல்களை சேகரிக்கும் பணி கள் இடம்பெற்று வருகின்றன. | சட்டத்தின் ஏற்பா டுகளின் படி செயற்படுதல் வேண்டும். |

4.3 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 – 2026 இற்கான ஐந்தாண்டு கூட்டிணைந்த திட்டம் 2022 ஆம் ஆண்டு ஆரம்பித்தற்கு 15 நாட்களிற்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 2022 யூலை 04 ஆந் திகதி வரையிலும் அதனைத் தயாரிப்பதற்காக அதிகாரசபையால் ரூபா 1,641,600 செலவிடப்பட்டிருந்த போதிலும், அத்திகதி வரையிலும் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 – 2026 இற்கான ஐந்தாண்டு கூட்டிணைந்த திட்டத்தை வெளிவாரி நிறுவனமொன்றின் உதவியுடன் உரிய படிவத்தில் முறையாகத் தயாரிப்பதற்கு சிறுது காலம் எடுக்கப்பட்டதுடன் தற்போது அந்தப் பணி இறுதிக் கட்டத்தில் உள்ளது. | பொது முயற் சிகள் சுற்றறிக் கையின் படி செயற்படுதல் வேண்டும். |